இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைகள் ஓய்வூதியங்கள் சட்டம்

*[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1993, ஏப்பிறில் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைகள் ஓய்வூதியங்கள்

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ.58/91

**மாகாண பகிரங்க சேவைகள் அலுவலர்களுக்கும் மாகாண சபைகள் செயலக பணியாட்டொகுதியினருக்கும் ஓய்வூதியங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மாகாண சபைகள் ஓய்வூதியங்கள் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**மாகாண பகிரங்க சேவைகள் அலுவலர்களுக்கும் மாகாண சபைகள் செயலக பணியாட்டொகுதியினருக்கும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டமும், 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதூரர் அனாதைகள் ஓய்வூதியங்கள் சட்டமும் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளும் ஏற்புடைத்தாதல்.**

2. (1) அமைச்சர், மாகாண சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், விடயத்துக்கேற்றவாறு, மாகாணமொன்றில் மாகாண பகிரங்கச் சேவையிலுள்ள அல்லது மாகாண சபையொன்றில் செயலகப் பணியாட்டொகுதியிலுள்ள பதவி எதனையும் வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து ஓய்வூதியமுள்ள பதவியொன்றென வெளிப்படுத்தலாம். (அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதியானது, நியமித்த தேதிக்கு முந்திய தேதியொன்றாக இருக்கலாம்.) அத்துடன் அதற்கிணங்க, அத்தகைய ஏதேனும் பதவியிலுள்ள சேவையானது அத்தகைய சேவை நியமித்த தேதிக்கு முந்தியதாக இருந்தாலென்ன அல்லது பிந்தியதாக இருந்தாலென்ன, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக, ஓய்வூதியமுள்ள பதவியிலுள்ள சேவைபொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகள், விதவைகள் அத்துடன் அனாதைகள் ஓய்வூதியங்கள் நிதியக் கட்டளைச் சட்டம் அத்துடன், 1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விதூரர் அனாதைகள் ஓய்வூதியங்கள் நிதியச் சட்டம் ஓய்வூதியமுள்ள பதவியொன்றென (1) ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் பதவிக்கு அல்லது பதவி தொடர்பில் விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய குறிப்புகளின் அல்லது கட்டளைச் சட்டத்தின் அல்லது சட்டத்தின் கருத்தெல்லைக்குள், அத்தகைய பதவியை வகிக்கின்றவர் ஒரு பகிரங்க சேவையாளர் அல்லது பகிரங்க அலுவலர் என்றவாறு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) மாகாணமொன்றின் மாகாண பகிரங்க சேவையிலுள்ள அல்லது மாகாண சபையொன்றின் செயலக பணியாட்டொகுதியிலுள்ள (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓய்வூதியமுள்ள ஒரு பதவியென வெளிப்படுத்தப்பட்ட பதவியை வகிக்கின்றவர் அப்பதவிக்கு அவர் நியமிக்கப்படுமுன்னர்—

(அ) ஓய்வூதியமுள்ளதென ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட பதவியொன்றை அரசாங்கத்தின் கீழ் வகித்திருந்தவிடத்து ; அல்லது

(ஆ) 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சி சேவைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட உள்ளூராட்சி ஓய்வூதிய நிதிய ஒழுங்குவிதிகளின் கீழ் ஓய்வூதியமுள்ளதென வெளிப்படுத்தப் பட்ட உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவியொன்றை வகித் திருக்கின்றவிடத்து,

அத்துடன், அத்தகைய பதவியில் அல்லது பதவிகளில் அவரது சேவை அத்துடன் மாகாணமொன்றின் மாகாண பகிரங்க சேவையில் அல்லது மாகாண சபை ஒன்றின் செயலகப் பணியாட்டொகுதியில் அவரது சேவை தொடர்ச்சியாக இருக்கின்றவிடத்து அத்தகைய ஒவ்வொரு பதவியிலும் அத்தகைய பதவி வகிக்கின்றவரின் சேவையானது (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புகளின் நோக்கங்களுக்காக ஓய்வூதியமுள்ள பதவியொன்றிலுள்ள சேவையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்குறிப்புகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(4) ஆளெவரும், அவர் அல்லது அவரது வாழ்க்கைத்துணை அல்லது அவரது பெற்றோர், உள்ளூராட்சிச் சேவையில் அத்துடன் மாகாண மொன்றின் மாகாண பகிரங்க சேவையில் அல்லது மாகாண சபை யொன்றின் செயலகப் பணியாட்டொகுதியில் பதவியொன்றை வகித் திருந்த காரணத்தினால் இச்சட்டத்தின் கீழ் ஓய்வூதியமொன்றுக்கு உரித்துடையவராகின்றவிடத்து, உள்ளூராட்சிச் சேவையில் அவரது அல்லது அவரது வாழ்க்கைத்துணைகளின் அல்லது பெற்றோர்களின் சேவை தொடர்பில், உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிதியத்திலிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அல்லது உள்ளூராட்சிச் சேவை விதுரர்கள், அனா தைகள் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அவருக்கு ஓய்வூதியமெதுவும் வழங் கலாகாது.

(5) மாகாணமொன்றின் மாகாண பகிரங்க சேவையிலுள்ள அல்லது மாகாண சபையொன்றின் செயலகப் பணியாட்டொகுதியிலுள்ள பதவி எதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓய்வூதியமுள்ள பதவியொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், அத் துடன் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், நியமித்த தேதிக்கு முன் அப்பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்றுவிட்டார் என்ற நிகழ்வு எப்படி யிருப்பினும், அப்பதவியை வகித்த ஒவ்வொராளுக்கும் ஏற்புடையனவா தல் வேண்டும்.

**5.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய— *பொருள் கோடல்.*

"உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய நிதியம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியமெனப் பொருள்படும்;

"உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியமெனப் பொருள்படும்;

"உள்ளூராட்சிச் சேவை விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் 16அ என்னும் பிரிவினால் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதுரர்கள், அனாதைகள் ஓய்வூதிய நிதியம் எனப் பொருள்படும்;

"மாகாணம்" என்பது, அரசியலமைப்பிற்கான எட்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள மாகாணம் ஒன்று எனப் பொருள்படும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மாகாண சபையொன்று எனப் பொருள்படும்.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை இருக்கும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*